செ.வெ.எண்-65 நாள்-27.03.2020

# அரியலூர் மாவட்டம்
# பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் தடையின்றி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் வேண்டுகோள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **திரு.வீ.ஆர்.சீனிவாசன்** அவர்கள் கலந்துகொண்டனர்.

**இக்கூட்டத்தில், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் தெரிவித்ததாவது,**

கொரோணா வைரஸ் தடுப்பு நடவடிக்கையில் மத்திய அரசும், மாநில அரசும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தடுப்பு நடவடிக்கையை தமிழகத்தில் முடிக்கிவிட்டு விழிப்புணர்வு பணிகளும், தொற்று நோய் பராவா வண்ணம் தடுப்பு நடவடிக்கைகளும் நடைபெற்று வருகிறது. பொதுமக்களாகிய நாமும் இந்த நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி கூட்டம் சேராத வண்ணம் தங்களையே சமூக தனிமைப்படுத்தி தொற்று நோய் ஏற்படாமல் தங்களையும், இந்த நாட்டு மக்களையும் பாதுகாக்க ஒத்துழைப்பு தர வேண்டும்.

அரியலூர் மாவட்டத்தில் பிப்ரவரி 15ஆம் தேதி முதல் வெளிநாடுகளிலிருந்து இதுநாள் வரை 1318 பயணிகள் வருகை புரிந்துள்ளனர். இதில், 1283 நபர்களை மருத்துவக்குழுவினரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், மாவட்டத்திலுள்ள கட்டுப்பாட்டு அறையிலுள்ள மருத்துவக்குழு மூலம் தினந்தோறும் அவர்களை தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு அவர்களின் உடல்நிலை குறித்து கேட்டறிந்து வருகின்றன. மேலும், அவர்களின் இல்லத்தில் கொரோன தொற்று உள்ளே நுழையாதே தனிமைப்படுத்தப்பட்ட வீடு என்ற வாசகங்கள் அடங்கிய ஒட்டும் வில்லைகள் ஒட்டப்பட்டு வருகிறது. அரசு மருத்துவமனையில் 10 நபர்களுக்கு சாதாரண காய்ச்சல் என்று அனுமதிக்கப்பட்டு, அவர்களின் இரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டு மேல் பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டு, 9 நபர்களுக்கு சாதாரண காய்ச்சல் என்று இரத்த பரிசோதனை அறிக்கை வரப்பெற்று சிகிச்சை முடிந்து வீட்டுக்கு சென்றுள்ளனர். 1 நபரின் இரத்தம் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது அதற்கான அறிக்கை வரபெறாததால், சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறார். மாவட்ட அளவில் 20 மருத்துவக்குழுக்களும், 82 காவல் கண்காணிப்புக்குழுகளும், 12 வருவாய்த்துறை குழுக்களும் மற்றும் 3 தீயணைப்புத்துறை குழுக்களும் அமைக்கப்பட்டு அனைத்து பகுதிகளும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும் நமது மாவட்டத்தில் அரியலூர் அரசு தலைமை மருத்துவமனையில் 200 படுக்கைகள் கொண்ட தனிமைப்படுத்தப்பட்ட சிகிச்சை வழங்குவதற்கான படுக்கை வசதிகளும் மற்றும் அரியலூர் மாவட்டத்திலுள்ள பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள், தொழிற்பயிற்சி நிலையங்கள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், சமுதாய நலக்கூடங்கள் என மொத்தம் 20 கல்லூரிகளில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை வழங்குவதற்கு 979 படுக்கை வசதிகள் தயார் நிலையில் உள்ளது.

அரியலூர், ஜெயங்கொண்டம், உடையார்பாளையம், செந்துறை ஆகிய பகுதிகளில் 4 அரசு ஆம்புலன்ஸ்களும், 9 தனியார் ஆம்புலன்ஸ்களும், மேலும், மாவட்டத்தில் 17 108-ஆம்புலன்ஸ்களும் 24 மணி நேரமும் அந்தந்த பகுதிகளில் தயார் நிலையில் உள்ளது.

மேலும், பொதுமக்கள் தங்களது காய்ச்சல் அறிகுறிகள் இருந்தால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் **24 மணி நேரமும்** செயல்பட்டு வரும் கட்டுப்பாட்டு அறைக்கு **1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும், 04329 - 228709 மற்றும் அலைபேசி எண்.99523 36840 என்ற** எண்ணிலும் தகவல் தெரிவிக்கலாம்.

பொதுமக்களுக்கு அன்றாட தேவைப்படும் அத்தியாவசிய பொருட்களான காய்கறிகள், பால், பழங்கள், மளிகை பொருட்கள் தடையின்றி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, பொதுமக்கள் கூட்டமாக பொருட்கள் வாங்குவதை தவிர்த்திடும் வகையில் அரியலூர் நகராட்சிக்குட்பட்ட காந்தி மார்கெட் தினசரி கடை வியாபாரிகள், தற்பொழுது தற்காலிகமாக அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் திறந்த வெளியில் ஒவ்வொரு கடைக்கும் 2 மீட்டர் இடைவெளி விட்டு அமைக்கப்பட்டு வியாபாரிகள் மூலம் காய்கறிகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காய்கறி மற்றும் பழங்கள் வாங்க வருபவர்கள் ஒருவருக்கொருவர் 2 மீட்டர் இடைவெளி விட்டு நின்று வாங்குவதற்கு வட்டம் இட்டு அடையாளம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனிப்படுத்துதல் என்பது உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் சமுதாயத்தையும் நாட்டையும் பாதுகாக்கும். எனவே, மக்கள் யாரும் அச்சம் கொள்ள வேண்டாம். அடிக்கடி கைகளை சுத்தமாக கழுவுங்கள். கூட்டம் கூடுவதை தவிர்த்து விடுங்கள் என மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

பின்னர், அரியலூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக லாரிகள் மூலம் கிருமி நாசினி தெளிக்கப்படும் பணிகளை மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்களுடன் பார்வையிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பொ.சந்திரசேகரன், மாவட்ட வருவாய் அலுவலர் கா.பொற்கொடி, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) (பொறுப்பு) மரு.இளவரசன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வீ.சி.ஹேமசந்த்காந்தி, நகராட்சி ஆணையர் குமரன், தலைமை மருத்துவ அலுவலர் மரு.இரவிசங்கர், மருத்துவர் ரமேஷ், வட்டாட்சியர் சந்திரசேகரன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**